## “கூட்டொருங்கியக்கத் திருஅவையாக”

- அருள்முனைவர் மி. ஜான் திரவியம்

## அகில உலக ஆயர்கள் மாமன்றத்தின் 16-ஆம் சாதாரண பொது அமர்வு 2021-202(3)4

## ஒன்றிப்பு – பங்கேற்பு – நற்செய்தி அறிவிப்பு

## “கூட்டொருங்கியக்கத் திருஅவையாக.”

### <u>முன்னுரை:</u>

அக்டோபர் 2021 முதல் 2023 வரை நடைபெறவுள்ள அகில உலக ஆயர் மன்றத்தின் துவக்க செயல்பாடுகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோமையில் 2021 ஆம் ஆண்டு, அக்டோபர் 9 ஆம் தேதி துவங்கினார். அதே மாதம் உலகிலுள்ள எல்லா மறைமாவட்டங்களிலும் மறை மாவட்ட ஆயர் மாமன்ற துவக்க நிகழ்வு அதிகாரப் பூர்வமாக மறைமாவட்ட பேராலயங்களில் துவங்க வேண்டும் என்ற உரோமை மாமன்ற செயலக ஆணைக்கிணங்க இந்தியாவின் எல்லா மறைமாவட்டங்களிலும் குறிப்பாக நம் தமிழக திருஅவையில் எல்லா மறைமாவட்டங்களிலும் துவங்கப்பட்டு மாமன்ற செயல்பாடுகள் இரண்டாம் கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. மறைமாவட்ட தயாரிப்புகளும், செயல்பாடுகளும் நிறைவு பெற்று, இந்திய ஆயர் மன்ற செயலகத்துக்கு அனுப்பப் பெற்று 10 பக்க அறிக்கை தயாரிக்கப்பட்டு, கண்ட அளவிலான (continental phase, FABC) செயல்பாடுகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. மூன்று ஆண்டு அகில உலக திருஅவை தயாரிப்புக்குப் பின் இம்மாமன்றம் 2023 அக்டோபரில் உரோமையில் திருத்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெறும் என்று முதலில் கூறப்பட்டது. அதற்கு தயாரிப்பாக இந்த மூன்று ஆண்டு தயாரிப்பு காலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது (2021 – 2023). ஆனால் கடந்த டிசம்பரில் (2022) திருத்தந்தை ஆயர் மாமன்றத்தை 2024-க்கு நீட்டி வைத்துள்ளார்[1]. நடைபெறவுள்ள அந்த ஆயர் மன்றம் பற்றிய கருத்துகளையும் மறைமாவட்ட அளவில் நடைபெறக்கூடிய ஆயர் மன்ற செயல்பாடுகள் பற்றியும், ஈண்டு காண்போம்.

### அகில உலக ஆயர் மன்ற வரலாறு:

1965 -ல் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க ஏடான “திருஅவையில் ஆயர்களின் மேய்ப்புப் பணி”[2] திருத்தந்தை ஆறாம் பவுல் ஆயர் மமான்றத்தை ஏற்படுத்தி முதல் மன்றத்தை கூட்டினார். அதன் பின்னர் நடந்துள்ள 15 ஆயர் மாமன்றங்களும் திருத்தந்தைக்கு ஆலோசனை கூறும் அமைப்புகளாக இருந்துள்ளன. 2022- ல் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடந்த 60ஆம் ஆண்டு ஜூபிலி விழாவை கொண்டாடும் வேளையில் நம் திருத்தந்தை “கூட்டொருங்கியக்கத்

---

[1] Vide: www.synodus.va

[2] Decree, “ Bishop’s Pastoral Office in the Church”, II Vatican Council, 1965.

திருஅவையாக'' என்ற புது சிந்தனையோடு உலகளாவிய இம்மன்றச் செயல்பாடுகளை செயல்படுத்தியுள்ளார்.

## ஆயர் மாமன்றம் - சொல் விளக்கம்:

"Synod" என்ற கிரேக்க சொல்லுக்கு ''சேர்ந்து நடத்தல்'' (walking together) என்பது பொருள். Synodality - கூட்டொருங்கியக்கத் திருஅவை என்பதை இறைமக்கள் அனைவரும் கிறிஸ்துவின் வழியில், தூய ஆவியானவரின் ஒளியில் சேர்ந்து பயணித்தல் என்று நாம் பொருள் கொள்ளலாம். [3] புனித ஜான் கிறிஸோஸ்தம் கூறுகிறார்: " திருஅவை என்றாலும் 'கூட்டொருங்கியக்கம்' (synodality) என்றாலும் ஒன்றே.

## அகில உலக ஆயர் மன்றம்:

திருச்சபை சட்ட எண்கள், 342-348 ஆயர் மன்றங்களைப் பற்றி பின்வருமாறு வரையறுக்கின்றன. ஆயர்கள் மாமன்றம் என்பது உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலங்களில் ஒன்றுகூடும் ஆயர்களின் குழுவாகும். இந்த ஆயர்கள் திருத்தந்தைக்கும் ஆயர்களுக்குமிடையே மிக நெருக்கமான ஒற்றுமையைப் பேணி வளர்க்கின்றனர். இறைநம்பிக்கை, ஒழுக்க நெறிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், திருஅவை ஒழுங்குமுறைகளைக் காக்கவும், உறுதிப்படுத்தவும், உலகில் திருஅவைப் பணியைப் பொறுத்தவரையில் தங்களது ஆலோசனையால் திருத்தந்தைக்கு உதவி புரிகின்றனர். (திருஅவைச் சட்டம், எண் 342)

மாமன்றத்தின் தலைவர் திருத்தந்தை (தி.ச 342). அகில உலக ஆயர் மன்றத்தை கூட்டுவதும், அதில் விவாதிக்கப்படும் நிகழ்ச்சி நிரலை முடிவு செய்வதும் (தி.ச. 344), அதில் நியமன உறுப்பினர்களை நியமிப்பதும், அம்மன்றத்துக்கு தலைமை வகிப்பதும் திருத்தந்தையே ஆவார் (தி.ச 344, 5°). மாமன்ற நிறைவில் அகில உலக திருஅவைக்குரிய முடிவுகளை ஆணையாக வெளியிடுவதும் உரோமை தலைமை ஆயரான திருத்தந்தையே (திச. 343).

அகில உலக ஆயர் மன்றம் இருவகைப்படும் 1) சாதாரண பொது அமர்வு (ordinary general assembly) 2) அசாதரண பொது அமர்வு (extraordinary general assembly). சாதாரண பொது அமர்வு என்பது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை, அகில உலகத் திருஅவை நலனுடன் நேரடித் தொடர்புடைய காரியங்களை பற்றி விவாதித்து முடிவெடுக்கக் கூட்டப்படும். இப்படி இதுவரை 15 பொது அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. 202(3)4 ல் நடைபெறும் மன்றம் 16-ஆவது ஆயர் மன்றம் ஆகும். 2015-ல் இளையோர் என்ற தலைப்பிலும், 2018-ல் 'குடும்பமும் நற்செய்தி அறிவிப்பும்' என்ற மையப் பொருளிலும் மன்றங்கள் நடந்துள்ளன.

இந்த சாதாரண ஆயர் மன்றத்திலேயே சிறப்பு அமர்வு (ordinary special assembly) என்ற கூட்டம் உண்டு. குறிப்பிட்ட ஒரு மண்டலத்தோடு, அல்லது மொழியோடு, கலாச்சாரத்தோடு தொடர்புடைய காரியங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுப்பது. உ.ம். கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த அமேசான் ஆயர் மன்றம். மேலும் ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா கண்டங்களை மையமாகக் கொண்டு சிறப்பு மன்றங்கள் நடந்துள்ளன. உடனடியாக சில காரியங்களைப் பற்றி திருஅவைக்குத் தீர்வுகான கூட்டப்படும் மன்றம் அசாதரண மன்றமாகும் (extraordinary general assembly). இப்படிப்பட்டவை மூன்று நடந்துள்ளன. 1985-ல் கத்தோலிக்கத்

---

[3] "Synodality denotes the particular style that qualifies the life and mission of the Church, expressing her nature as the People of God journeying together and gathering in assembly, summoned by the Lord Jesus in the power of the Holy Spirit to proclaim the Gospel. Synodality ought to be expressed in the Church's ordinary way of living and working.
Synodality, in this perspective, is much more than the celebration of ecclesial meetings and Bishops' assemblies, or a matter of simple internal administration within the Church; it is the specific *modus vivendi et operandi* of the Church, the People of God, which reveals and gives substance to her being as communion when all her members journey together, gather in assembly and take an active part in her evangelizing mission," See: What is Synodality?, www.synodus.va.

திருஅவையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church) என்ற தலைப்பிலும், 2014-ல் குடும்பம் என்ற தலைப்பிலும் நடந்துள்ளன.

## 16 ஆம் ஆயர் மன்றத்தின் சிறப்பு:

வழக்கமாக ஆயர் மன்றத்தின் பெரும்பகுதி உறுப்பினர்கள் அந்த அந்த ஆயர் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர்கள் ஆவர். ஆயர் மன்ற சிறப்பு சட்டத்தின்படி குறிக்கப்பட்ட மற்ற ஆயர்கள், திருத்தந்தையால் நியமனம் செய்யப்படும் குருக்கள், துறவியர் போன்றோரும் இம்மன்றத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இப்படிப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படுவது தான் வழக்கமான ஆயர் மன்றமாகும் (திச. 346). ஆனால் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த 16- ஆம் ஆயர் மன்றத்தை அகில உலக திருஅவையில் இருக்கின்ற ஒட்டு மொத்த கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் கருத்துக்களைக் கேட்டு அதன் அடிப்படையில் நடத்த திட்டமிட்டுள்ளார். ஆகவே பங்கேற்பாளர்கள் அகில உலகத்தில் இருக்கின்ற அனைத்து கத்தோலிக்க கிறிஸ்தவர்கள். இதுவே இம்மன்றத்தின் சிறப்பம்சமாகும்.

### ஆயர் மாமன்ற செயல்பாடுகள்:

இச்செயல்பாட்டுக்கு 2021 அக்டோபர் 2021-லிருந்து (3) 4 ஆண்டுகள் காலத்தையும் மூன்று படிநிலை தயாரிப்புகளையும் வரையறுத்துள்ளார். அவையானவன: 1. அக்டோபர் 2021 – ஏப்ரல் 2022 வரை உள்ள மறைமாவட்ட கலந்துரையாடல் மற்றும் கருத்து சேகரிப்பு காலம் 2) செப்டம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை உள்ள கண்டம் வாரியாக நடைபெறும் கலந்துரையாடல் காலம் 3) நிறைவாக அக்டோபர் 202(3)4 ல் நடை பெறும் ஆயர்கள் மன்றம். ஒவ்வொரு கட்டத்திற்குப் பின்னும் அந்த அந்த மறைமாவட்டங்களும், கண்டங்களும் கருத்துத் தொகுப்பை வத்திக்கான் பொதுச் செயலகத்துக்கு அனுப்ப, பொதுச் செயலகம் வழிகாட்டும் செயல் முறைத் தொகுப்பை (Instrumentum laboris) அகில உலகுக்கும் அனுப்பி வைக்கும். அதுவும் விவாதிக்கப்படும்.

இம்மாமன்ற செயல்பாடுகளை ஒருங்கிணைக்க மாமன்றத் தயாரிப்பு ஏடு வெளியிடப்பட்டுள்ளது (Lineamenta). கூட்டொருங்கியக்கத் திருஅவையாக வளர்வதற்கு, ஆவியானவர் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நம்மைத் தூண்டுகிறார் என்று சிந்திப்பதற்கு, மாமன்றத் தயாரிப்பு ஏடு அழைப்பு விடுக்கிறது. தயாரிப்பு ஏட்டின் நோக்கம்: 1. இறைமக்கள், தங்களின் கருத்துக்களைத் துணிச்சலோடு எடுத்துரைக்க, 2. அவற்றுக்கு, முற்சார்பற்ற மனநிலையோடு செவிமடுக்க, 3. திருஅவை, சமுதாயம், மற்ற கிறிஸ்தவ சபைகள் ஆகியவற்றோடு கலந்துரையாடல் நடத்த, 4. திருஅவை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட, நற்செய்தி அறிவிப்புப் பணியில், பல்வேறு நிலைகளில் ஒன்றிணைந்து பயணிக்க, 5. கூட்டொருங்கியக்கத் திருஅவையாக வளர்வதற்கு, நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தூய ஆவியானவர் நம்மைத் தூண்டி வழிநடத்துகிறார் என்பதை அறிந்துகொள்ள. [4] இத்தயாரிப்புக் கையேட்டின் நோக்கம் என்ன? தலத் திருஅவையில் உள்ள இறைமக்களின் அனுபவங்களை வெளிப்படுத்த, குரல் கொடுக்க, அவர்களைத் தயாரிக்க உதவியாக இருக்க.

## இம்மன்றத்தின் சிறப்பம்சங்கள்:

(1). இந்த 16 ஆம் ஆயர் மன்றத்தின் சிறப்பு அனைத்து கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களோடு கலந்துரையாடல் நடத்தி அவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஆயர் மன்றம் கூட்டம் நடத்தி, விவாதித்து முடிவெடுப்பது. இது ஒரு முறை நடத்தி முடிக்கப்படும் கூட்டம் அல்ல. மாறாக கூட்டொருங்கியக்கத் திருஅவையின் செயல்பாட்டு நடைமுறையாக (synodal process), வாழ்க்கை முறையாக மாற பயிற்றுவிப்பது.[5] உலகத்திலுள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் மறைமாவட்ட தொடர்பாளர்களை ஏற்படுத்தி[6] அவர்களை ஒருங்கிணைக்க அந்தந்த நாட்டின்

---

[4] பார்க்க: மாமன்றத் தயாரிப்பு ஏடு, 1

[5] "We recall that the purpose of the Synod is not to produce documents, but to plant dreams, draw forth prophecies and visions, allow hope to flourish, inspire trust, bind up wounds, weave together relationships, awaken a dawn of hope, learn from one another and create a bright resourcefulness that will enlighten minds, warm hearts, give strength to our hands", see: www.synod.va.

[6] மதுரை உயர் மறைமாவட்ட தொடர்பாளராக இக்கட்டுரை ஆசிரியரும், அருள்சகோ. டெல்பினும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆயர் பேரவையால் மாமன்ற செயலகமும் (synod desk of India for CCBI) உருவாக்கப்பட்டு திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்துக்களும் உள்வாங்கப்படுகின்றது. பதிவு செய்யப்படுகின்றது.

(2). இம்மன்றத்தின் இரண்டாவது சிறப்பு அதன் தலைப்பு. இதுவரை நடந்த சில மன்றங்களின் தலைப்பு "நற்செய்தி அறிவிப்பு" "குடும்பம்" "இளையோர்" மற்றும் "அமேசான்" என்று இருக்க, இந்த மன்றத்தின் தலைப்பை "கூட்டியக்கத் திரு அவைக்காக" என்று (Syniod on "Synodality)" வரையறுத்துள்ளார் நம் திருத்தந்தை. இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில், நவீன தொலை தொடர்பு சாதனங்கள் உலகை ஆக்கிரமித்துள்ள காலச் சூழ்நிலையில், எப்படி அகில உலகில் உள்ள அனைத்து நம்பிக்கையாளர்களும் கூட்டியக்கத்தால், தூய ஆவியானவரின் வழிகாட்டுதலின் படி, நற்செய்தி அறிவித்து, எப்படி இறையரசை கட்டி எழுப்பும் திருஅவையாகத் திகழ வேண்டும் என்று விவாதிக்க அழைப்பு விடுக்கின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.




3) **இலச்சினை:** இந்த ஒட்டு மொத்த கருத்தோட்டத்தை வெளிப்படுத்த பொதுச் செயலகம் வெளியிட்டுள்ள இலச்சினை நம் கருத்தைக் கவருகின்றது. இங்கே கோடுகளால் வரையப்பட்டுள்ள ஓங்கி உயர்ந்து, விண்ணைத்தொடும் வலிமையான மரம் சிலுவையைக் குறிக்கின்றது. மேலே உள்ள சூரியன் கிறிஸ்து ஏற்படுத்திய, நற்கருணையைக் குறிக்கின்றது. அதற்கு கீழே உள்ள சிறகுகள் போலுள்ள மரத்தின் கிளைகள் தூய ஆவியைக் குறிக்கின்றன. அதே போன்று கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் தேக்க நிலையில் இல்லாமல், கிடைக்கோட்டில் இலக்கை நோக்கி பயணப்படுபவர்களாக உள்ளனர். அனைவரும் சம கோட்டில் பயணப்படுகின்றனர். பல்வேறு வண்ணங்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நம்பிக்கையாளர்கள் 15 பேர் உள்ளனர். இவர்களில் பெரியோர், சிறியோர், தம்பதியர், குழந்தைகள், துறவறத்தார், ஆயர்கள், நோயுற்றோர் என அனைவரும் ஒருங்கியக்கமாக பயணம் செய்கின்றனர். இதுவே திரு அவையின் பயணம். இதில் சிறப்பம்சம் என்னவெனில் இப்பயணத்தை வழிநடத்துபவர்கள் ஆயர்களோ, துறவறத்தாரோ அல்ல, மாறாக குழந்தைகள். அதுவும் சிறுவர், சிறுமியர். இந்த பல்வேறு நிலையிலுள்ள நம்பிக்கையாளர்கள் அனைவரும் கூட்டியக்கமாக, ஆவியானவரின் வழிநடத்துதலில், நற்செய்தி அறிவிப்புப் பணிபுரிய பயணப்படுகின்றனர். இப்படிப்பட்ட இலட்சினையின் கீழே இம்மன்றத்தின் துணை தலைப்புகளாக மூன்று கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருவன.

# ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு
## communion – participation - mission

4) **ஒன்றிப்பு:** மூவொரு இறைவனின் அன்பிலும், ஒன்றிப்பிலும் இணைந்து நம்பிக்கையாளர்கள் நாமனைவரும் ஒன்றித்து ஒரே திருஅவையாக வாழ்கின்றோம்.

**பங்கேற்பு:** தூய ஆவியானவரிடமிருந்து பெற்றுக் கொண்ட கொடைகளுக்கேற்ப (உரோ.12:4-8) அனைத்து கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களும் தங்கள் தனி வரங்களின்படி திருஅவையின் முப்பணிகளில் (tria munera) பங்கேற்கின்றனர். குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள நம்பிக்கையாளர்கள் திரு அவையின் செயல்பாடுகளில் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**நற்செய்தி அறிவிப்பு:** நற்செய்தி அறிவிப்பதற்காகவே திருஅவை உள்ளது. ஆகவே இவ்வுலகச் சூழ்நிலையில், ஆன்மீக, சமூக, பொருளாதார, அரசியல், புவியியல் எல்லைகளுக்கு உட்பட்ட மக்களுக்கு சிறந்த சான்று தருவதே நற்செய்தி அறிவிப்புப் பணி ஆகும்.

### ஆயர் மாமன்றத்தின் நோக்கம் என்ன?

உலக ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கம் என்ன? இறைமக்கள் ஒருவர் ஒருவருக்குச் செவிகொடுத்து அனைவரும் இணைந்து தூய ஆவியானவர் திருஅவைக்கு சொல்ல விரும்புவது என்ன என்பதை செவிமடுத்துக் கேட்பதுவே மாமன்றத்தின் நோக்கம் ஆகும்.

1. தூய ஆவியானவர் எவ்வாறு வரலாற்றில் திருஅவையின் பயணத்தை வழிநடத்தியுள்ளார் என்பதையும், இன்று எவ்வாறு நம்மை இறையன்பின் சாட்சிகளாக அழைக்கிறார் என்பதை நினைவுகூர.
2. அனைவரும் பங்கேற்கக்கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய, குறிப்பாக பல காரணங்களுக்காக விளிம்பு நிலையில் உள்ளவர்கள், இறைமக்களின் மேம்பாட்டுக்காக தாங்கள் சொல்ல விரும்புவதை வெளிப்படுத்தவும், திருஅவை செவிமடுக்கவும் வாய்ப்பைப் பெற.
3. இறைச் சமூகத்தின் நலனுக்காகவும், ஒட்டு மொத்த மனிதக் குடும்பத்தின் நன்மைக்காகவும் ஆவியானவர் தாராளமாகப் பொழிகின்ற பல்வகை வரங்களையும், அருட்கொடைகளையும் அடையாளம் காண.
4. நற்செய்தியை அறிவிப்பதிலும், இன்னும் அழகான, வாழத் தகுந்த உலகைக் கட்டியெழுப்பும் முயற்சியிலும் பொறுப்புடன் செயல்பட, பங்கேற்பு வழிமுறைகளை ஆராய.
5. திருஅவையில் எவ்வாறு பொறுப்புணர்வும் அதிகாரமும் செயல்படுகின்றன என்றும், இவற்றை நிர்வகிக்க பயன்படும் அமைப்புகள் என்ன என்றும் ஆய்வு செய்ய. இதன் விளைவாக நற்செய்தியில் வேரூன்றாத முற்சார்பு எண்ணங்களையும், சிதைந்துபோன பழக்கங்களையும் மாற்றியமைக்க.
6. சமூக உரையாடல், குணப்படுத்தல், ஒப்புரவு, உள்ளடக்கம், பங்கேற்பு மக்களாட்சியை மீண்டும் கட்டியெழுப்புவது, சகோதரத்துவத்தை ஊக்குவிப்பது, சமூக நட்பு ஆகியவற்றின் நம்பத் தகுந்த பங்கேற்பாளராக கிறித்தவ சமூகத்தை அங்கீகரிக்க.
7. கிறித்தவ குழுக்களின் உறுப்பினர்களிடையே, பிற கிறித்தவ சபைகளிடையே, மதங்களிடையே, மக்கள் இயக்கங்களிடையே உறவுகளைப் புதுப்பிக்க.
8. உலகளவில், கண்டங்களில், நாடுகளில், தலத் திருஅவையில் நடைபெறும் மாமன்ற அனுபவங்களின் கனிகளைப் பாராட்டி நமதாக்கிக்கொள்ளும் மனநிலையை வளர்ப்பதற்கு (மாமன்றத் தயாரிப்பு ஏடு, 2).

## <u>மறைமாவட்ட அளவிலான துவக்க விழா: முதல் கட்ட தயாரிப்பு:</u>

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் இந்த ஆயர் மாமன்ற துவக்க விழா நடத்த வத்திக்கான் மாமன்ற செயலகம் அறிவுறுத்தியதற்கேற்ப மறைமாவட்டங்கள் செயல்பாடுகளை துவக்கின. உதாரனமாக 2021 அக்டோபர் 26- ஆம் தேதி செவ்வாய்க் கிழமை, காலை 10.00 மணி அளவில், மதுரை உயர் மறைமாவட்ட புனித மரியன்னை பேராலயத்தில், மறைமாவட்ட அளவிலான ஆயர் மன்றத்தை பேராயர் துவக்கினார். திருப்பலியின் நிறைவில் ஆலயத்திலேயே ஆயர் மாமன்ற விளக்கக் கூட்டம் மறைமாவட்ட தொடர்பாளர்களால் நடைபெற்றது.

## <u>மறைமாவட்ட அளவிலான செயல்பாடுகள்: கலந்துரையாடல், கருத்து சேகரிப்பு பணிகள்:</u>

அக்டோபரில் அனைத்து மறைமாவட்டத்தில் துவங்கிய இந்தப் பணியானது தொடர்ந்து மறைவட்ட அளவில் (vicariate synod), பங்கு அளவில் (parish synod), துறவியர் பேரவை அளவில் (religious synod), பல்வேறு மட்டங்களில் நம்பிக்கையாளர்களின் கருத்து சேகரித்தல், கருத்துபகிர்வு நடைபெற்றது. அதற்கு உதவியாக உலக ஆயர்கள் மாமன்ற பொதுச் செயலகம், கேள்வித் தொகுப்பை அனுப்பி வைத்துள்ளது. அதனடிப்படையில் நமது மறைமாவட்டத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும்.

மறைமாவட்ட அளவிலான கருத்து சேகரிப்புப் பணி பத்து கருப்பொருள்களில் நடந்தது. இந்த பத்து தலைப்புகளும் திரு அவையில் உள்ள நம்பிக்கையாளர்கள் அனைவரும் கூட்டியக்கத்தோடு, ஆவியானவரின் வழிநடத்துதலில் பயணம் செய்கின்றோமா என்று சுய ஆய்வு செய்ய வழிவகுக்கின்றன. அவையாவன:

1. உடன் பயணிக்கும் தோழர்கள்:
2. செவிமடுத்தல்
3. உரையாடுதல்
4. கொண்டாடுதல்

5. மறைபணியில் பங்கேற்பு
6. திருஅவைக்குள்ளும், வெளியேயும் உரையாடல்
7. பிற சபைகளோடு உரையாடல்
8. அதிகாரமும், பங்கேற்பும்
9. தேர்ந்து தெளிதல், முடிவெடுத்தல்
10. கூட்டியக்கமாக செயல்படுதல்

மேற்கூறிய பத்து கருப்பொருள்களை 5 கருப்பொருளாகவோ அல்லது 3 கருப்பொருளாகவோ அனைத்து கருத்துருக்களையும் இணைத்து அந்தந்த மறைமாவட்ட சூழ்நிலைகளுக்கேற்ப வடிவமைக்க சுதந்திரம் வழங்கியது மைய செயலகம். இதன் அடிப்படையில் மறைமாவட்டங்கள் கேள்விகளை தயாரித்து மறைமாவட்டத்திலுள்ள அனைத்து இறைமக்களின், பங்கின் கடைக் கோடியில் - விளிம்பில் இருக்கின்ற கடைசி நம்பிக்கையாளர் வரை அவர்கள் கருத்துகளைக் கேட்டது. ஆயர் மாமன்ற செபங்கள் அச்சடிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது.[7]

இந்த மூன்று கேள்விகளுக்குமான பதில் அனைத்து தரப்பு இறைமக்களிடமிருந்தும் பெறப்பட்டு, தொகுக்கப்பட்டு, 10 பக்க ஆவணமாக தமிழக ஆயர் பேரவையின் மாமன்ற செயலகத்துக்கும் பின்னர் தமிழக மறைமாவட்டங்களின் 10 பக்க அறிக்கை இந்திய ஆயர் இலத்தின் பேரவையின் மைய செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது 2023-ல் மார்ச் மாதத்தின் போது கண்ட (ஆசியா) அளவிலான தொகுப்பு நிறைவு பெற்று இரண்டாவது மாமன்ற செயல்பாட்டு ஏடு (instrumentum laboris) அனைத்துலக திருஅவைக்கும் அனுப்பி வைக்கப்பட்டு 2024-ல் மாமன்றம் உரோமில் நடைபெ(றும்)றலாம்.

## இரண்டாம் கட்ட மாமன்ற செயல்பாடுகள் - கண்ட அளவில்
## PHASE II – CONTINENTAL PHASE

இரண்டாம் கட்ட செயல்பாடுகளை உரோமை மைய செயலகம் அக்டோபர் 27, 2022 அன்று விடுத்த தயாரிப்புக்கான அறிக்கை (working document) மூலம் மீண்டும் துவக்கியது. உலகிலுள்ள மறைமாவட்டங்களை மீண்டும் சிந்திக்கவும் எக்காரணிகளெல்லாம் கண்ட அளவில் விவாதிக்கப்பட வேண்டும் எனவும், மீண்டும் மீண்டும் அழுத்தமாக வரும் காரணிகள் எவை எனவும் குறிப்பிட கேட்டுக் கொண்டது. இக்காரணிகளை திரும்பப் பெற்று கண்ட அளவிலுள்ள செயலகங்கள் 2023 மார்ச் மாதத்துக்கு முன்னர் கண்ட அறிக்கையை தயார் செய்து உரோமைக்கு அனுப்பும். நமது ஆசிய கண்ட அளவிலான மாமன்ற கூட்டம் 2023 பெப்ருவரி 23-26 ல் பாங்காக்கில் நடைபெறும்.

### இரண்டாம் கட்ட (கண்ட) அறிக்கையின் சாராம்சம்:

[7] மதுரை உயர் மறைமாவட்டத்தில் 42 நபர்களடங்கிய ஆயர் மாமன்ற குழுவினரால் தயாரிக்கப்பட்ட 3 கேள்விகள் பின்வருமாறு: 1. நீங்கள் கூட்டொருங்கியக்கத் (அனைவரும் ஒன்றாகச் செயல்படும்) திருஅவையின் உறுப்பினர் என்பதை எப்படி உணர்கின்றீர்கள்? கருதுகின்றீர்கள்? பங்கேற்பதில், கருத்துக்களை பகிர்வதில், முடிவெடுத்தலில், நற்செய்தி அறிவித்தலில் உங்கள் பங்கு என்ன?

2. நமது திருஅவை சேர்ந்து செயல்படும், ை) குறிப்பாக பெண்கள், இளையோர், விளிம்பு நிலையில் உள்ளோர், ை) மற்றும் பிற கிறித்தவ சபைகள், பிற சமயத்தவர் போன்றோருடன் சேர்ந்து, உரையாடும், செயல்படும் திருஅவையாக செயல்படுவதில் உள்ள சவால்கள் மற்றும் சாதகமான சூழ்நிலைகள் யாவை?

3. வழக்கமான ஞாயிறு திருப்பலி, வழிபாடுகள், கொண்டாட்டங்களில் பங்கேற்பது நீங்கலாக இன்னும் என்ன வழிகளில் ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவையாக (அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் திருஅவையாக) நாம் அனைவரும் பயணம் செய்ய, உங்கள் கனவு திருஅவைக்காக (Dream Church) உங்கள் பரிந்துரைகள் யாவை?

எசா. 54:2ஐ மைய சிந்தனையாக வைத்து திருஅவையும் இறைமக்களும் தங்கள் கூடாரத்தை விரிவாக்கி எல்லோருக்கும் இடமளித்து அனைவரோடும் சேர்ந்து வாழ்கின்ற திருஅவையாக விளங்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றது.

இந்த தயாரிப்பு அறிக்கையின் பின்புலத்தில் மூன்று கேள்விகள் நாடுகளின் திருஅவைக்கு தேர்ந்து தெளிந்து பதிலளிக்க அனுப்பப்பட்டுள்ளது.

அ. கண்ட அளவிலான அறிக்கையை வாசித்த பின் எக்காரணிகள் உங்கள் கண்டத்திலும் திருஅவையின் முக்கிய காரணியாக கண்டறியப்பட்டுள்ளன? எச்செய்திகள் அல்லது காரணிகள் உங்களுக்கு புதியதாக மற்றும் கண்களை திறப்பதாக உள்ளன?

ஆ. உங்களுடைய நாட்டின் பின்புலத்தில் எக்காரணிகள் பிரச்சனைக்குரியதாகவும், பிளவு படுத்துபவையாகவும் உள்ளன? எத்தகைய காரணிகள் அடுத்த கட்ட மாமன்ற விவாதிக்க அல்லது செயல்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்? அப்படிப்பட்ட மூன்று காரணிகளை வரிசைப்படுத்துக.

இ. மற்ற நாட்டு திருஅவைகளோடு நீங்கள் பகிர்ந்து கொள்ளக் கூடிய மூன்று முக்கிய காரணிகளை வரிசைப்படுத்துக. உங்கள் நாட்டில் பெறப்பட்ட தரவுகளில் தொடர்ந்து குறிப்பிடப்படும் மூன்று தலைப்புகளை குறிப்பிடுக. மேலும் அதில் குறிப்பிடப்பட்ட மூன்று தீர்மானங்களை குறிப்பிடுக.

**முடிவுரை:**

பொருளாதார பெருக்கம், வாழ்வியலே கணனிமயமாக்கல், மனித செயல்பாடுகளனைத்தும் இயந்திரத்தோடு இணைத்தல் என்ற அகில உலக சூழ்நிலையில், தொற்று நோய்களும் நாடுகளுக்கிடையே போர்கள் நிலவும் பின்னணியில் திருஅவையின் வாழ்வும் செயல்பாடுகளும் மேற்குறிப்பிட்ட தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றன. இப்பின்புலத்தில் திருஅவை தன்னிடம் உள்ள ஊனியல்புகளின் தன்மைகளைக் களைந்து, துணிவுடன் கிறிஸ்துவுக்கு சான்று பகர கனிணி மய மற்றும் இயந்திர மய தத்துவங்களுக்கு அடிபணியாமல் திருஅவையின் நம்பிக்கைக் கோட்பாடுகளையம் அறநெறி விழுமியங்களையும் கடைபிடித்து தூய ஆவியானவரின் ஒளியில் அனைவரையும் உள்ளடக்கிய திருஅவையாக செயல்பட 16-ஆம் அகில உலக ஆயர் மாமன்ற செயல்பாடுகள் உதவட்டும். நன்றி.

## பின் இணைப்பு - 1

**SYNOD FOR A SYNODAL CHURCH 2021 – 2023/4 Preparation for the Continental Phase**
**One-Page Summary & Discernment Questions of the *Document for the Continental Stage***

*Profile of the Document*: "Enlarge the Space of Your Tent" (Is 54:2). Working Document for the Continental Stage. Given on 27 October 2022. Not a conclusive statement. Includes quotes from different syntheses of the First Phase. Presents the points of convergence and divergence.
**Introduction** (nn. 1-14). Sets the context of the Document and presents the content of the document.

**First Chapter**: Experience of the Synodal Journey (nn. 15-24). Describes the turning points, surprises and challenges that the people of God encountered and experienced during the First Phase of the Synod. Sets our common baptismal dignity as the starting point.

**Second Chapter**: Listening to the Scriptures (nn. 25-28). Stating that the synodal journey is a return from an exile (n. 24), the document presents the image of tent promised by the prophet Isaiah. The cloths, the ropes and the pegs of the tent are used metaphorically to refer to enlarging, accommodating and being rooted in faith.

**Third Chapter**: Towards a Missionary Synodal Church (nn. 29-97). 'Missionary' and 'Synodal' become two sides of a coin (cf. nn. 29-30). "We are called to go to every place,

especially outside the more familiar territories" (n. 31). Under the following five headings, various points that have emerged in the consultation have been gathered: (i) *Listening that becomes welcoming* (nn. 32- 40): An option for young people; people with disabilities and the defence of life; listening to those who feel neglected and excluded. (ii) *Sisters and brothers for mission* (nn. 41-56): The Church's mission in today's world; walking together with all Christians; cultural contexts; cultures, religions and dialogue. (iii) *Communion, participation and co-responsibility* (nn. 57-70): Beyond clericalism; Rethinking women's participation; Charisms, vocations and ministries. (iv) *Synodality takes shape* (nn. 71-87): Structures and institutions; Formation; Spirituality. (v) *Synodal life and liturgy* (nn. 88-97): Roots that reach deep; Managing tensions: renewal and reconciliation; A synodal style of celebrating.

**Fourth Chapter**: The Next Steps (nn. 98-109). Long-term and short-term horizon: (i) A journey of conversion and reform; (ii) Methodology for the continental stage.

***

**Reading-Reflection-Discernment Questions**

**I. After reading and reflecting on the *Document for the Continental Stage* (nn. 29-97): (i)** Which intuitions resonate most strongly with the lived experiences and realities of the Church in your continent? **(ii)** Which experiences are new, or illuminating to you?

**II. From the *Document for the Continental Stage* (nn. 29-97): (iii)** What substantial tensions or divergences emerge as particularly important in your continent's perspective? **(iv)** What are the questions or issues that should be addressed and considered in the next steps of the process?" [From the answers to qn. iii, prioritize any three issues]

**III. For sharing with other local Churches and for taking into discussion in the First Session: (v)** What are your priorities? [Propose any three]**; (vi)** What are your recurring themes? [Propose any three]**; (vii)** What are your calls to action? [Propose any three]

CCBI National Coordinating Team for the Continental Phase I synodindia@gmail.com
The Continental Phase of FABC will be held in Bangkok from 23 – 26 February 2023.